# அமைச்சர்கள் அறையில் 'ரீல்ஸ்' : த.வெ.க.வினரால் போலீசார் அதிர்ச்சி!

சென்னை, ஜூலை 26-

தலைமைச் செயலகம் மற்றும் அமைச்சர்களின் அறைகளுக்குள் சென்று, 'ரீல்ஸ்' எடுக்கும் த.வெ.க.வினரால், பாதுகாப்பு போலீசார் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் முதல்வர் விஜய் தலைமையில், தமிழக வெற்றிக் கழக அரசு, கடந்த மே 10ம் தேதி பதவியேற்றது. அமைச்சர்கள், உயர் அதிகாரிகளை சந்திக்க, முதல்வரின் தனிப்பிரிவில் புகார் அளிக்க, தமிழகம் முழுதும் இருந்து, பலரும் தலைமைச் செயலகம் வருகின்றனர். இதனால், அங்கு நாளுக்கு நாள் கூட்ட நெரிசல் அதிகரித்து வருகிறது.

இதனால், பாதுகாப்பு கெடுபிடிகளை போலீ சார் அதிகரித்துள்ளனர். மூன்று 'ஷிப்ட்' அடிப்படையில், போலீசார் 24 மணி நேரமும், தலைமைச் செயலக நுழை வாயிலில் பணி புரிந்து வருகின்றனர்.

தலைமைச் செயலகத்திற்கு உள்ளே செல்வோரிடம், அதற்கான காரணம் பெறப்படுகிறது. யாரை சந்திக்க வேண்டும்; அதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது குறித்த கேள்விகள் எழுப்பப்பட்டு, பதில்கள் பெறப்படுகின்றன.

உரிய ஆவணங்களுடன் வருவோர் மட்டுமே, தலைமைச் செயலகத்திற்குள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர்களை சந்திக்க அனுமதி பெற்று வரும் தலைமைச் செயலகத்தை சுற்றி, 'வீடியோ' பதிவு செய்து வருகின்றனர்.

சிலர் ஆர்வ கோளாறில், நுழைவாயிலில் தொடங்கி, அமைச்சரை சந்திப்பது வரை, வீடியோவாக பதிவு செய்து, சமூக வலைதளங்களில் 'ரீல்ஸ்' ஆக வெளியிட்டு வருகின்றனர். எந்தெந்த பகுதிகள் வழியாக செல்லலாம் என, ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

சமீபத்தில், கனிமவளத்துறை அமைச்சர் பிரபு அறைக்கு சென்றதையும், அவரை சந்தித்ததையும், இளம்பெண் ஒருவர் 'ரீல்ஸ்' ஆக வெளியிட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. அமைச்சர்கள், துறை செயலர்கள் செல்லும், வி.ஐ.பி., லிப்டில் பயணித்து, அமைச்சரை சந்தித்து ஆலோசனை நடத்துவதும் வீடியோவாக வெளியானது; இது போலீசாரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தலைமைச் செயலகம் உள்ளே எடுக்கப்படும் வீடியோ, சமூக விரோதிகளின் கைகளுக்கு 'செல்லக்கூடிய அபாயம் உள்ளது. எனவே, இதுபோல் வீடியோ எடுப்பதை தடுக்க வேண்டும் என, சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

சமீபத்தில், கனிமவளத்துறை அமைச்சர் பிரபு அறைக்கு சென்றதையும், அவரை சந்தித்ததையும், இளம்பெண் ஒருவர் 'ரீல்ஸ்' ஆக வெளியிட்டார். அமைச்சர்கள், துறை செயலர்கள் செல்லும், வி.ஐ.பி., லிப்டில் அவர் பயணித்து, அமைச்சரை சந்தித்து ஆலோசனை நடத்துவதும் வீடியோவாக வெளியானது.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், "கழகத்தின் வேர்களைத் தேடி என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, திருத்தணி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட மத்தூர் கிளைக் கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்சந்தித்து கலந்துரையாடினார். உடன் ஒன்றிய செயலாளர் என்.கே.கிருஷ்ணன் கிளைச் செயலாளர்கள் உள்பட பலர் உள்ளனர்.

### நீர் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு தொடர்பாக

# பொதுமக்கள் கருத்து தெரிவிக்க காலக்கெடு நீட்டிக்கப் பட்டுள்ளதா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 26 -

நீர்பாதுகாப்பு. மழை நீர் சேகரிப்பு தொடர்பாக பொதுமக்கள் கருத்து தெரிவிக்க காலக்கெடு நீட்டி க்கப்பட்டுள்ளதா என மக்களவையில் திருவண்ணா மலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



நீர் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் நிரப்பு மற்றும் நீர் சேமிப்பு அமைப்புகளை மதிப்பிடுவதில் பொதுமக்கள் பங்கேற்பை அதிகரிப்பதற்காக ஜல் சஞ்சய் ஜன் பாகிதாரி (JSJB) 2.0 இணையதளத்தில் குடிமக்கள் கருத்து தெரிவிக்கும் காலக்கெடுவை அரசு நீட்டித்துள்ளதா? அவ்வாறு நீட்டித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் JSJB 2.0 திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக உருவாக்கப் பட்ட நீர் பாதுகாப்பு சொத்துகள் (அமைப்புகள்) எத்தனை? பெறப் பட்ட குடிமக்கள் கருத்துகளின் எண்ணிக்கை என்ன?

தமிழ்நாட்டின் வறட்சி மற்றும் நீர்ப்பற்றாக்குறை அதிகம் உள்ள மாவட்டங்களில் உருவாக்கப்பட்ட நீர் பாதுகாப்பு அமைப்புகளின் செயல்திறன், பயன்பாடு மற்றும் நீடித்த தன்மையை அரசு மதிப்பீடு செய்துள்ளதா? அவ்வாறு செய்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

JSJB திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சமூகப் பங்கேற்பை வலுப்படுத்தவும், நிலத்தடி நீர் நிரப்புதலை மேம்படுத்தவும், பாரம்பரிய நீர்நிலைகளைப் புதுப்பிக்கவும், மேலும் நீர் பாதுகாப்புத் திட்டங்களுக்கு கூடுதல் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் அரசு மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் என்ன? என மக்களவையில் சி.என். அண்ணா துரை கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் ராஜ் பூஷண் சௌத்ரி அளித்த பதிலில்,

ஆம். ஜல் சக்தி அமைச்சகம் JSJB 2.0 இணையதளத்தில் குடிமக்கள் கருத்து தெரிவிக்கும் காலக்கெடுவை நீட்டித்துள்ளது. 26.01.2026 அன்று தொடங்கப்பட்ட இந்த முயற்சியின் மூலம், நாடு முழுவதும் உள்ள குடிமக்களும் பிற பங்குதாரர்களும் நீர் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் நிரப்புதல் மற்றும் நீர் சேமிப்பு பணிகள் தொடர்பாக 31 ஜூலை 2026 வரை தங்களது கருத்துகளைப் பகிர முடியும் என தெரிவித்துள்ளார்.

### விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால்

# மாபெரும் அறவழிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்!

## திருவாரூரில் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. எச்சரிக்கை!

திருவாரூர்,ஜூன்26.

தேர்தல் நேரத்தில் த.வெ.க. தலைமை, மக்களை ஏமாற்றும் வகையில் விவசாயிகளின் கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வோம் என்கிற வாக்குறுதியை கொடுத்துவிட்டு, ஆட்சிப்பொறுப்புக்கு வந்ததும் விவசாயி களை வஞ்சித்து விவசாய கடனை தள்ளுபடி செய்வதில் குழப்பங்களை ஏற்படுத்தி ஏமாற்றும் விஜய் தலைமையிலான தவெக அரசை கண்டித்து திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்ட விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி மற்றும் அனைத்து அரசியல் சார்பற்ற விவசாய சங்கங்கள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்றார். விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் சத்யநாராயணன், முகமது ரபீக், சந்திரசேகரன், விவசாய அணி மற்றும் விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர்கள் குன்னலூர் அன்பழகன், ஜானகிராமன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவானன் எம்.எல்.ஏ., "சிறுபிள்ளைகளிடம் கொடுத்த வேளாண்மை வீடு வந்து சேராது என்கிற பழமொழிக்கு ஏற்றார் போல எதிலும் அனுபவம் இல்லாத இந்த தவெக ஆட்சியில் வேளாண்மையே செய்யவே வழி இன்றி போய்விட்டது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் திராவிட நாயகர் தளபதி அவர்களும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளின்படி எந்த வித நிபந்தனை களையும் விதிக்காமல் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்து விவசாயத்தை வாழ வைத்தார்கள்.

ஆனால் த.வெ.க. அரசு தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளின்படி கடனை தள்ளுபடி செய்யாமல் பல்வேறு தேவையற்ற நிபந்தனை களை விதித்து அந்த தள்ளுபடி விவசாயிகளுக்கு முற்றிலும் பயனற்றதாக்கி ஒட்டுமொத்த விவசாய



குடும்பங்களையும், விவசாயத்தையும் பாழ்படுத்திவிட்டது.

தி.மு.க. ஆட்சிகளின்போதெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 மேட்டூர் அணை திறக்கப்பட்ட தால் வேளாண்மையை செழிக்க வைத்தது. ஆனால் "அடுத்த பிறவியில் நான் விவசாய குடும்பத்தில் பிறக்க ஆசைப்படுகிறேன் என்று மேடையில் பேசி ஏமாற்றிய விஜய் இந்த பிறவியிலேயே விவசாயத்தை பாழ்படுத்திக்கொண்டிருக்கிறார்.

ரேஷன் கார்டில் உள்ள ஒருவருக்கு மட்டுமே கடன் தள்ளுபடி, கூட்டுறவு சங்கங்களில் பொறுப்பில் உள்ளவர், கூட்டுறவு வங்கிகளில் பணிபுரிபவர்கள் ஆகியோருக்கு தள்ளுபடி இல்லை என்கிற தவெக அரசின் அறிவிப்பால் கடன் வாங்கி விவசாயம் செய்யும் பலர் இப்போது தவித்து வருகிறார்கள்.

த.வெ.க. அரசு உடனடியாக விவசாய கடனை முழுமையாக தள்ளுபடி செய்யவேண்டும், குறுவை பொய்த்து பாதிக்கப்பட்டவர்களுக்கு 15000 ரூபாய் இழப்பீடு வழங்கவேண்டும், விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு 10000 ரூபாய் வழங்கிடவேண்டும், பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும், மேகதாதுவில் அணைக்கட்டுவதற்கு கண்டனத்தை தெரிவித்து தடுக்க வேண்டும் ,

ஆனால் அதனை செய்யாமல் இப்படி விவசாயிகளுக்கும் விவசாய தொழிலாளர்களுக்கும் வஞ்சகங்களை மட்டுமே கொடுக்கும் த.வெ.க. அரசு தொடர்ந்தால் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி மிகப்பெரிய அளவுக்கு அறப்போர் போராட்டங்களை முன்னெடுப்போம் என குறிப்பிட்டு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பேசினார்.

இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் விவசாய அணி மாவட்டக் கழக நிர்வாகிகளும் கழக நிர்வாகிகளும் மற்றும் விவசாயிகளும்,விவசாய தொழிலாளர்களும், அரசியல் சார்பற்ற விவசாய பெருங்குடி மக்களும், விவசாய ஆர்வலர்களும், ஏராளமான பொதுமக்களும் பெருந்திரளாக பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் விவசாய அணி மாநில செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் அவர்களின் தாயார் மறைந்த சுப்பம்மாள், விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் மறைந்த வீரா.தேசபந்து ஆகியோருக்கு மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

### மக்கள் பயன்பாட்டிற்குத் தேவையான

# அரியலூர் - பெரம்பலூர் - நாமக்கல் ரயில் சேவை!

## அருண் நேரு எம்.பி. கோரிக்கையை ஏற்றது ரயில்வே துறை!

திருச்சி, ஜூலை 26 -

பெரம்பலூர் மாவட்ட மக்கள் ரயில் போக்குவரத்து வசதியை அன்றாடம் பயன்படுத்த அரியலூர் அல்லது திருச்சிக்கு செல்ல வேண்டும் . மாவட்ட மக்களுக்கு ரயில் போக்குவரத்து வசதி என்பது கனவாகவே இதுவரை இருந்து வந்தது. பலமுறை பலர் முயற்சி செய்தும் பலன் இல்லை.

இந்நிலையில் பார்லிமெண்டில் பெரம்பலூர் எம்பி அருண் நேரு எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து பேசிய ரயில்வே அமைச்சர் அரியலூரில் இருந்து பெரம்பலூர் வழியாக நாமக்கல் வரை புதிய ரயில் பாதை அமைப்பது குறித்த விரிவான செயல் திட்ட அறிக்கையை தயாரிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த செயல் திட்டம்



குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப் பட்டு நிதி ஆயோ மத்திய நிதியமைச்சகம் மதிப்பீட்டு ஒப்புதலுக்குப் பிறகு முறையான அனுமதி வழங்கப் படும் என்று தெரிவித்தார்.

இது குறித்து பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு கூறும் போது, பெரம்பலூர் எம்.பி. ஆக பொறுப்பேற்றது முதல் பார்லிமெண்டில் ரயில்வே பட்ஜெட் மீதான வெட்டு தீர்மானத்திலும் ரயில்வே அமைச்சர் உடன் தனிப்பட்ட சந்திப்புகளிலும் பெரம்பலூர் மாவட்டத்திற்கு நேரடி ரயில் இணைப்பு கோரி மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து ரயில்வே அமைச்சகத்திடம் அழுத்தமான முறையில் வலியுறுத்தி வந்தேன். அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் பார்லிமெண்டில் நான் எழுப்பிய கேள்விக்கு மத்திய ரயில்வே துறை தற்போது அதிகாரப்பூர்வமாக பதில் அளித்துள்ளது.

அரியலூர் ரயில் நிலையத்தில் இருந்து சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் பெரம்பலூருக்கு நேரடி தரைவழி போக்குவரத்து தேவையை மத்திய அரசு ஆவணப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

அதோடு 116 கிலோ மீட்டர் நீள நாமக்கல் - பெரம்பலூர் - அரியலூர் புதிய ரயில் பாதை திட்டத்திற் கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க முழு ஒப்புதலையும் வழங்கி உள்ளது.

இந்த ரயில் பாதை திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போது மக்களுக்கு எளிதான மற்றும் வேகமான பயணம், உள்ளூர் தொழில்கள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கு ஊக்கமளிக்கும் உள்ளூர் பொருட்களுக்கான வலுவான விவசாய சந்தை அமையும். தொகுதியின் பொருளாதார மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு பெருகும். இந்த கனவு திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்வேன் என்று கூறினார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

வேலூர் தெற்கு மாவட்டம், குடியாத்தம் நகரத்தைச் சேர்ந்த குடியாத்தம் குமரன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 600 018.
நாள் : 25.07.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தாயார்

# மணியம்மாள் (எ) மணிமேகலை மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 26 -

கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசனின் தயார் மணியம்மாள் (எ) மணிமேகலை அவர்கள் (வயது 87) வயது முதிர்வின் காரணமாக 25.07.2026 அன்று அதிகாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை, தாயை இழந்து வாடும் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசனுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.



கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் அவர்களின் தாயாரும், மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொதுவுடமை போராளி ஏ.கே.சுப்பையா அவர்களின் மனைவியுமான சுப்பம்மாள் அம்மையார் அவர்களின் இறுதி அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்வில், கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் பங்கேற்று அம்மையாருக்கு அஞ்சலி செலுத்தி அவரது திருவுருவப் படத்தினை திறந்து வைத்தனர்.

# துறையூர் அரசுக் கல்லூரியில் திருவள்ளுவர் திருவிழா!

## புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை!

திருச்சி, ஜூலை 26 -

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, துறையூர் மற்றும் திருச்சி, பொங்கு தமிழ் இளையோர் இயக்கம் இணைந்து நடத்தும் திருவள்ளுவர் திருவிழா கல்லூரி அரங்கத்தில் - 28.07.2026 செவ்வாய் காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் மு.அருணாசலம் தலைமை வகிக்கிறார்.

மேலாண்மை அறங்காவலர், (பொங்கு தமிழ் இளையோர் இயக்கம்) முனைவர் தி.நெடுஞ்செழியன் வரவேற்புரையாற்றுகிறார்.

அறங்காவலர், (பொங்கு தமிழ் இளையோர் இயக்கம்) ப.மாணிக்கம் முன்னிலை வகிக்கிறார்.

பொருள் செய் அறங்காவலர், (பொங்கு தமிழ் இளையோர் இயக்கம்) பாவலர் குறள்மொழி தொடர்வுரையாற்றுகிறார்.

மாணாக்கர்களுக்குப் பரிசு வழங்கி - தமிழ்நாடு அரசின் பாவேந்தர் விருதாளர் புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரையாற்றுகிறார்.

வேதியியல் துறை தலைவர் முனைவர் து.ராஜதுரை நன்றி உரையாற்றுகிறார்.

அறங்காவலர், (பொங்கு தமிழ் இளையோர் இயக்கம்) முனைவர் சு.செயலாபதி நிகழ்ச்சியினை தொகுத்து வழங்குகிறார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## உடுமலை நாராயணன்
## ஜூலை 26 (1971)



கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும், பொள்ளாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

கொங்கு நாட்டில் கழகத்தை கட்டி வளர்த்த சிறந்த செயல்வீரர். உடுமலை தேசிங்கு என்று நண்பர்களால் புகழ்ச்சியாக அழைக்கப்பட்ட முன்னணித் தோழரும் – கழகம் துவங்கிய காலம் முதல் கோவை மாவட்டக் கழக நிர்வாகத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவரும் கழகத் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் விளங்கியவர்.

"1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோவை மாவட்டத்தை கழகத்தின் கோட்டையாக்கிய பெருமைக்குரியவர்" என தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**